# ஒருங்கிணைந்த தோட்டக்கலை வான்கோழி வளர்ப்பு

வான்கோழிகள் வரலாற்று ஆரம்பம் 500 ஆண்டுகளுக்கு முந்தையது ஆகும். ஏழு வகையான வான்கோழிகள் மட்டுமே உலகில் காணப்பட்டன. காட்டுக்கோழிகளை முதன்முதலில் அமெரிக்க வாழ் இந்தியர்கள் வசப்படுத்தி வீட்டுப் பறவைகளாக வளர்க்க ஆரம்பித்தனர். 16லிருந்து 20ம் நூற்றாண்டுக்குள் வான்கோழிகள் வீட்டு வாழ் பறவைகளாக உலகநாடுகள் அனைத்திலும் பரப்பப்பட்டது. கோழிகளுக்கான அமெரிக்க தர நிர்ணய சபை வான் கோழிகளில் 8 வகைகளை அங்கீகரித்துள்ளது. வான்கோழி வளர்ப்பு என்பது அமெரிக்காவிலும் மற்றும் சில மேற்க்கத்திய நாடுகளிலும் இலாபம் தரும் பெரும் தொழிலாக கருதப்பட்டாலும் இந்தியாவில் வான்கோழி வளர்ப்புத் தொழில் பொதுவாக சிறிய அளவிலேயே உள்ளது என்று கூறலாம். வான்கோழிகள் தற்போது இறைச்சிக்காகவே வளர்க்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. வான்கோழி இறைச்சியை பெரும்பாலும் விழாக்கால இறைச்சி என்று பெயரிட்டு அழைத்து வருகின்றனர். வான்கோழிகள் மற்றும் வாத்துக்களை தற்போதுள்ள கோழிகள் போல் முட்டை உற்பத்தியில் போட்டி போட இயலாது. அது பொருளாதார ரீதியில் இலாபகரமாகவும் இருக்காது. காரணம் வான்கோழிகள் அதிகப்படியாக முட்டையிடுவதில்லை. ஆனால் வான்கோழிகள் இரைறச்சி உற்பத்தியிலோ அதன் கலவையிலோ மற்ற இறைச்சி உற்பத்தி செய்யும் கோழியினம் மற்றும் விலங்கினங்களுடன் போட்டியிட இயலும். மேலும் பழ மற்றும் மலர் தோட்டங்கள் வைத்திருப்பவர்கள் ஒருங்கிணைந்த வான்கோழிகள் வளர்ப்பதன் மூலம் அவற்றின் களை மற்றும் பூச்சிகளை கட்டுப்படுத்துவதுடன் உர மேலாண்மை மற்றும் வளம் பாதுகாக்கப்பட்டு பொருளாதார ரீதியில் பெரும் பயன் அடையலாம்.

**வான்கோழிகள் இனங்கள்**

1. கறுப்பு
2. பிரான்ஸ்
3. நராகன்செட்
4. சிலேட்டு
5. வெள்ளை ஹாலண்டு
6. பார்பன் சிகப்பு
7. பெல்ட்ஸ்வில்லி சிறிய வெள்ளை
8. ராயல் பாம்

இந்தியாவில் பெரும்பாலும் சுதேசி இனகருப்பு நிற வான்கோழிகள் சிறிய அளவில் பல இடங்களில் விவசாயிகளால் வளர்க்கப்பட்டு வருகிறது. அத்துடன் வெளிநாட்டு இனங்களான அகன்ற மார்பு கொண்ட பிரான்ஸ், அகன்ற மார்பு கொண்ட பெரிய வெள்ளை மற்றும் பெல்ட்ஷ்வில்லி சிறிய வெள்ளை வான்கோழிகள் சிறிய அளவில் பல இடங்களில் வைத்து வளர்க்கப்படுகின்றன. நமது நாட்டில் இத்தகைய வான்கோழிகளை ஆழ்கூள முறையில் வைத்து அதிக

அளவில் வளர்க்கிறார்கள். இத்தகைய வான்கோழிகள் 10 வார வயதில் சுமார் 4 கிலோ எடை கொண்டதாக வளரும். இத்தகைய வான்கோழிகள் நம்நாட்டு தட்ப வெப்ப நிலைக்கு ஏற்றதாகும்.

**பழ மற்றும் மலர் தோட்டங்களில் வான்கோழி பராமரிப்பு**

வான்கோழிகள் மூன்று வளர்ப்பு முறைகளில் வளர்க்கலாம்.

1. வான்கோழிகள் வெளியிலேயே விட்டு வளர்க்கும் முறை
2. கொட்டகையிலும் வெளியில் விட்டும் வளர்க்கும் முறை
3. வான்கோழிகளுக்கு கொட்டகை அமைத்து அதனுள்ளேயே வளர்க்கும் முறை

வான்கோழிகள் பொருத்த அளவில் பழ மலர், பெரிய தோப்பு அல்லது மேய்ச்சல் தரையில் வளர்ப்பது நல்லதாகும். இவ்வாறு வளர்க்கப்படும் வான்கோழிகளுக்கு முழுமையான, அதிக செலவுடன் கூடிய வீட்டு அமைப்பு தேவைப்படாது. அவைகள் இரவில் தங்கவதற்கும், மழை மற்றும் வெயில் நேரங்களில் தங்குவதற்கும் ஒரு தங்கும் வசதி அமைத்தால் போதுமானது. பழ, மலர் மற்றும் தொப்புகளில் விட்டு வளர்க்கப்படும் வான்கோழிகளுக்கு அதிகம் அடர்த்தீவனம் கொடுக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அவைகள் இந்த தோட்டங்களில் கிடைக்கும் தானியங்கள், களைச்செடிகள், பச்சை கீரை வகைகள், பழ மற்றும் மலர் செடிகளை தாக்கும் பூச்சிகள் மற்றும் புழுக்களை உண்டு வாழும் தன்மை கொண்டது. இதனால் இத்தோட்டங்களில் களை எடுக்கவும், பூச்சி கட்டுப்பாட்டிற்கும் செய்யக் கூடிய செலவு குறைகிறது. மேலும் வான்கோழிகள் நிலத்தை கிளரி புழுக்களை உண்ணுவதால் மண்ணின் தன்மை மேம்படுவதோடு, மேலே உள்ள காய்ந்த இலை, தழைகள் மண்ணுக்குள் சென்று மக்கி நல்ல உரமாவதுடன் மண்ணுக்குள் காற்றோட்டம் அதிகரித்து பழ மற்றும் மலர் செடிகளின் உற்பத்தி அதிகரிக்கின்றது. மேலும் வான்கோழிகள் இடும் எச்சமானது இத்தோட்டங்களுக்கு நல்ல எருவாகிறது. இதனால் இத்தோட்டங்களுக்கு எருவுக்காக செய்யப்படும் செலவு குறைகிறது. இவ்வாறு வெளியில்விட்டு வளர்க்கப்படும் வான்கோழிகளுக்கு நல்ல, சுத்தமான குடிநீர் கொடுப்பது அவசியம் ஆகும். பழ, மலர் மற்றும் தோப்புக்களில் விட்டு வளர்க்கப்படும் வான்கோழிகளை அடிக்கடி இடம் மாற்றி வளர்க்க வேண்டும். இவ்வாறு இடம் மாற்றி வளர்க்கும் போது மேய்ச்சல் தரையில் உள்ள உணவு மற்றும் ஊலிட்டச் சத்துக்கள் அழிவதில்லை. மேலும் வான்கோழிகள் ஆரோக்கியமாக இருக்கும். வெளியில் விட்டு வளர்க்கப்படும் வான்கோழிகளுக்கு குறைந்தது ஒரு வான்கோழிக்ளு 75 சதுர அடி இடவசதி இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த வளர்ப்பு முறையில் வளர்க்கப்படும் வான்கோழிகள் கொட்டகைகளில் வைத்து, அடர்த்தீவனம் கொடுத்து வளர்க்கப்படும் வான்கோழிகளைப் போல் எடை கூடுவதில்லை.

**பல, மலர் மற்றும் தோப்புக்களில் விட்டு வளர்க்கப்படும் வான்கோழிகளில் நோய் தடுப்பு**

வான்கோழிகள் சில நோய்களுக்கு கோழிகளை விட அதிக நோய் எதிர்ப்பு கொண்டவை. நச்சு நோய்களான மேரக்ஸ் மற்றும் சிறு மூச்சுக் குழல் நோய்கள் பெரும்பாலும் தாக்குவதில்லை. இராணிக்கெட், கோழி அம்மை மற்றும் இரத்தக் கழிச்சல் நோய் வான்கோழிகளை சிறிய அளவிலேயே தாக்குகின்றன. ஆனால் வான்கோழிகளை கோழிக் காலரா, கோழி டைபாய்டு, மைக்கோபிளாஸ்மா, நீலக்கொண்டை, கருஞ்சிரம், எரிசிபிலஸ், ஹெக்சாமிட்டியாசிஸ் மற்றும் குடற்புழுக்களால் ஏற்படும் நோய்கள் அதிகளவில் தாக்குகின்றன. இத்தகைய நோய்களுக்கு மருந்துகள் கிடைத்தாலும் இந்நோய்களை தடுக்க சிறந்த பராமரிப்பு மற்றும் உயிர் பாதுகாப்பு முறைகளை கையாள வேண்டும்.

**வான்கோழி விற்பனை**

வான்கோழிகள் 16லிருந்து 20 வார வயதுக்குள் இறைச்சிக்காக விற்பனைக்கு தயாராகிவிடும். இதுவே சரியான விற்பனை வயதாகும். இந்த வயதில் விற்பனை செய்யப்படும் வான்கோழியின் இறைச்சி மிருதுவாகவும், ருசியாகவும் இருக்கும். மக்கள் விரும்பி உண்ணுவர். அதனால் வான்கோழி இறைச்சிக்கு அதிக தேவை ஏற்படும் வயது ஏற, ஏற இறைச்சியின் தரம் குறைந்து கடினத்தன்மை அதிமாக இருக்கும். மக்களிடம் இத்தகைய இறைச்சிக்கு தேவை குறைந்துவிடும்.

வான்கோழிகளை பழ, மலர் மற்றும் தோப்புகளில் ஒருங்கிணைந்து வளர்ப்பதன் மூலம் விவசாயிகளுக்கு உபரி வருவாய் கிடைப்பதோடு பழ, மலர் மற்றும் தோப்புகளில் களை மற்றும் பூச்சிகொல்லி மருந்துகளுக்கு ஆகும் செலவு குறைவதோடு உரத்திற்கான செலவும் குறைந்து பல வகையிலும் விவசாயிகள் பயன்பெறலாம்.